# லூக்கா எழுதின சுவிசேஷம்

## இயேசு என்னும் மனுஷகுமாரன்

# இப்புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- வேதாகமத்தின் புத்தகங்களை எழுதியவர்களில் லூக்கா மாத்திரமே புறஜாதியை சேர்ந்தவர்.
- அவர் புறஜாதியை சேர்ந்தவர் என்பதோடு இரண்டாம் தலைமுறை கிறிஸ்தவராயும் இருந்தார். (இயேசு இப் பூமியில் வாழ்ந்தபோது அவரை பாாக்காத, அவரை அறியாதவர் ஒருவர்)
- அவர் புறஜாதியை சேர்ந்தவர் வைத்தியர் (கொலோ 4:10-14)
- பவுல் கொலோசேயருக்கு எழுதினபோது வாழ்த்துதல் சொன்ன புறஜாதியாரின் பெயர்களில் லூக்காவின் பெயரும் இடம்பெறுகிறது. (கொலோ 4:14)
- அவர் கிரேக்க கலாச்சாரத்தையும், மொழியையும் நன்கு கற்றவராயிருந்தார்.
- இவர் பவுலின் இரண்டாவது பிரசங்கப் பயணத்தின்போது துரோவாவில் பவுலுடன் இணைந்துகொண்டார் (அப் 16:6-10)
- பவுல் மூன்றாவது பயணத்தை முடித்து வரும்வரையில் பிலிப்பி பட்டணத்தில் தங்கியிருந்தார் (அப் 16:17,40, 20:26)
- பவுல் ரோமாபுரியில் சிறையில் இருந்தபோது லூக்கா அவருடன் இருந்திருக்கிறார் (பிலமோன் 24) என்பதோடு பவுல் மரிப்பதற்கு சிலகாலங்கள் இருக்கும்போது சிறையில் இருந்து தீமோத்தேயுவுக்கு இரண்டாவது கடிதத்தை எழுதினவேளையில் அவருக்கு உற்ற துணைவனாக லூக்கா இருந்திருக்கிறார் (2தீமோ 4:11)
- இறுதியாக லூக்கா கிரேக்கத்திலுள்ள தீப்ஸ் படடணத்தில் குடியிருந்து 84வது வயதில் மரித்ததாக பழங்கால ஆவணங்கள் தெரிவிக்கின்றன.
- நான்கு சவிஷேசங்களில், புதிய ஏற்பாட்டு பத்தகங்களிலும் லூக்கா எழுதின சுவிஷேசமே மிக நீளமானது.
    - அதிகாரங்கள் 24
    - வசனங்கள் 1151

# இந்தப் புத்தகத்தின் உடனடி வாசகர்கள்

லூக்கா 1:1-4

மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று.

- இந்த சுவிஷேசம் தெயோப்பிலு என்கிற தனிநபருக்கு எழுதப்பட்டிருக்கிறது (1:3). தெயோப்பிலு என்றால் "தேவனை நேசிக்கிற ஒருவன்" என்ற பொருள்.
- பெயரோடு சொல்லப்பட்டுள்ள கனம்பொருந்திய என்கிற அடைமொழி இவன் ஒரு ரோம அதிகாரியாகவோ அல்லது குறைந்தபட்சம் நல்ல அந்தஸ்தும், செல்வமும் உடையவனாயிருந்திருக்கலாம் என்கிற எண்ணத்தை தருகிறது.
- இதைப் பார்க்கிறபொழுது ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்திற்காக கிறிஸ்துவைப் பற்றிய நிகழ்வுகளையும் (லூக்காவின் சுவிஷேசம்) கிறிஸ்தவத்தையும் (அப்போஸ்தலருடைய நடபடிகள்) குறித்து நேர்த்தியாக ஆராய்ந்து எழுத தெயோப்பிலு கேட்டுக்கொண்டதின் நிமித்தம் இது லூக்காவால் எழுதப்பட்டிருக்கலாம்.
- "கண்ணாரக்கண்டு", "திட்டமாய் விசாரித்தறிந்து", "முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகள்", "ஒழுங்காய் எழுதுவது" போன்ற வார்த்தைகள் இது இயேசுவைக்குறித்த வாழ்க்கைசரிதம் என்பதைகாட்டிலும் மேலானது என்பதை காண்பிக்கின்றது.

- இது ஒரு சட்டபூர்வ ஆவணத்தைபோன்று பின்வரும் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது.

அ) கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் குறித்து ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் தெயோப்பிலுவைப்போன்ற ஒருவருக்கு தெரிவிக்கும் வகையில் ஆரம்பமுதல் நன்கு ஆராய்ந்து முறையான, விபரமான விதத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஆ) உண்மையில் நடந்த நிகழ்வுகளை எழுதியபோது அது எந்தவிதமான சட்டச் சிக்கலையும் உருவாக்கிவிடாதவாறு, அதன் வரலாற்று உண்மைத்தன்மையை துல்லியமாக ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது.

இ) ஒரு நீதிமன்றத்தில் வாதங்களை எடுத்துவைப்பதுபோல முரண்பாடின்றி நேர்த்தியான வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஈ) மற்ற சுவிஷேசங்களை போலல்லாது இந்த புத்தகம் மிக உயர்தரத்திலான கிரேக்க இலக்கிய மொழிநடையை கொண்டுள்ளது. வேதாகமத்தின் வேறு எந்த புத்தகத்திலும் காணமுடியாத, வரலாற்றை எழுதும்போது கையாளப்படும் கிரேக்க செம்மொழி முறையிலான அறிமுகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1:1-4). இதிலே இதை ஆக்கியோன் (1) அதன் தலைப்பு (2) அதன் நோக்கம் (3) அதை எழுத கையாண்ட முறை (4) அதன் வாசகர் போன்ற தகவல்களை நேர்த்தியாக தருகிறார்.

- ரோம அதிகாரிகளை குறித்து குறிப்பிடுப்பொழுது ஒரு உணர்வுபூர்வமான தன்மையை கையாள்கிறார்.

(1) 23ம் அதிகாரத்தில் “இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை” என்று பிலாத்து மூன்று முறை சொன்னது (23:4,14-15,22)

(2) சிலுவையருகே நின்ற நூற்றுக்கு அதிபதி இயேசுவை கறித்து நற்சாட்சி கொடுத்தது (23:47)

(3) அப்.நடபடிகளில் அரசாங்க அதிகாரிகளை நல்லவிதத்தில் காண்பிக்கிறார். பவுல் ரோம அதிகாரிகளுக்கு முன்பாக பேசினபொழுது அவர்களுக்கு மதிப்பளித்து பேசுவதையும் அவர்கள் அவனுக்கு சரியான வகையில் பதில் அளித்தது (அப் 26:31-32)

- இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம் கவனத்திற்குரியது.
- அப்.நடபடிகளுக்கு முன்பு இது எழுதப்பட்டது.
- பவுல் செசரியாவில் இரண்டு ஆண்டுகள் சிறையிலிருந்தபோது(அப்24:27) கிறிஸ்துவின் வாழ்க்கையை குறித்து ஆராய்ச்சி செய்ய லூக்காவுக்கு போதுமான காலஅவகாசம் இருந்தது. அப்போது அவர் அதை செய்தார்.
- லூக்கா சுவிஷேசத்தின் தொடர்ச்சியாக அதே தெயோப்பிலுவிற்கு எழுதப்பட்ட அப்.நடபடிகள் பவுல் ரோமாபுரியில் சிறையில் இருந்தபோது(அப்28:30) கிபி 63ல் எழுதப்பட்டிருக்கலாம்.
- மேலும் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு நடந்த ஒரு முக்கிய நிகழ்வு அப் 1:6ல் சொல்லப்படுகிறது. அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.
- இந்தக் கேள்விக்கான பதில்

1. எருசலேமை விட்டுப்போகவேண்டாம்
2. பரிசுத்த ஆவியினால் பெலனடைவீர்கள்
3. பிரிந்துசென்று உலகமெங்கும் இயேசுவை குறித்து அறிவியுங்கள்
4. இதை சொன்னபின்பு தான் இன்னநாளில் திரும்பிவருவேன் என்பதை அறிவிக்காமல் இயேசு போய்விடுகிறார்.

- இது கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் அன்று ஆண்டுகொண்டிருந்த ரோம ஆட்சிக்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதை தெரியப்படுத்துகிறது.

- ரோமப்பேரரசுக்கு எதிராக் கலகம் செய்வதையோ, அல்லது ஆட்சியை கவிழ்ப்பதையோ இயேவும், அவருடைய சீஷர்களும் நோக்கமாய் கொண்டிருக்க வில்லை.
- லூக்காவின் சுவிஷேசத்தில் "தேவனுடைய ராஜ்யம்" என்னும் சொல்லானது 32 தடவைகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.
- இவையெல்லாவற்றோடும் அப்நடபடிகள் பவுல் தனது வழக்கை இராயருக்கு முன்பாக எடுத்துரைக்க ரோமாபுரியில் காத்திருப்பதோடு திடீரென முடிவடைவதையும் கவனத்தில்கொண்டு பார்க்கும்போது
- லூக்காவும், அப்.நடபடிகளும் பவுல் தனது வழக்கை இராயருக்கு முன்பாக எடுத்துரைக்க உதவிசெய்யும் நோக்கத்திற்காக, பவுல் செய்த பிரசங்கங்கள் எந்த அரசியல் நோக்கமும் கொண்டவையல்ல அவை ஆவிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கமுடையவை என்று நிரூபிப்பதற்காக தயாரிக்கப்பட்டதாக நான் கருதுகிறேன்.
- பவுலின் விசாரணையின் இறுதி முடிவு தெரிவதற்கு முன் பவுல் கொடுத்த செய்திக்கு ஆதாரமாக ஆராய்ச்சி செய்யப்பட்ட பின்னணி தகவல்கள் அடங்கிய ஆவணமாக இது இருக்கிறது.

# இந்தப் புத்தகத்தின் கிரேக்க வாசகர்கள்

- எபிரேய வரிவசூலிப்பாளரான மத்தேயு எபிரேய மக்களுக்காக எழுதினார். பவுல், பேதுரு ஆகியோரின் பயணத்துணையான மாற்கு ரோமர்களுக்காக எழுதுகிறார். பவுலின் மருத்துவமிஷனரியான லூக்கா புறஜாதியாருக்காக எழுதுகிறார்.
- உதாரணமாக கிறிஸ்துவின் வம்சவரலாற்றை மனிதகுலத்தில் பிதாவான ஆதாமில் இருந்து ஆரம்பிக்கிறாரேயன்றி யூதர்களின் பிதாவான ஆபிரகாமிலிருந்து ஆரம்பிக்கவில்லை.
- லூக்கா பகுத்தறிவு, தத்துவம், மனிதமனம், அழகு ஆகியவற்றை உயர்த்திப் பிடிக்கிற கிரேக்க கலாச்சார அமைப்பில் இயேசுவை ஒரு பூரண மனிதராக காண்பிக்கிறார்.
- இதன் காரணமாகவே இயேசுவை "மனுஷ குமாரன்" என்று 23 தடவைகளும் "தேவனுடைய குமாரன்" என்று 7 தடவைகளும் குறிப்பிடுகிறார்.
- இந்த பட்டப்பெயர்களின் அர்த்தம் என்னவென்றால் "இயேசு பரிபூரணமான மனிதன். அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்"
- லூக்கா இயேசுவின் சிறுபருவ நிகழ்ச்சிகளை மற்ற எழுத்தாளர்களை காட்டிலும் அதிகமாக பதிவிடுகிறார். அவருடைய வளர்ச்சியை இயற்கையான பொதுவான வளர்சியாயும் அதேவேளை பரிபூரணமுள்ள பிள்ளையாகவும் விபரிக்கிறார் (2:40,51-52)
    1. அகஸ்துராயனின் மக்கள்தொகை கணக்கெடுப்பு
    2. பெத்தலகேம் பயணம்
    3. இயேசுவின் பிறப்பும், மேய்ப்பர்கள் வணங்குதலும்
    4. இயேசுவின் விருத்தசேதனம்
    5. சிமியோனின் வாத்தைகள்
    6. இயேசு 12 வயதில் ஆலயத்தில் வேதபாரகர்களோடு உரையாடுதல்

- இயேசு ஜெபித்த நிகழ்வுகளை மற்ற சவிஷேச எழுத்தார்களைவிட லூக்கா அதிகமாக பதிவிட்டுள்ளார். இயேசு ஜெபித்த 15 நிகழ்வுகளில் லூக்கா 11ஐ பதிவிட்டுள்ளார்.
- இயேசு பரிசுத்த ஆவியால் வல்லமையாய் பலப்படுத்தப்பட்டதை லூக்கா வலியுறுத்துகிறார் (1:35,3:22,4:1,18,10:21, ஒப்பிடுக அப்.10:38).
- இயேசுவை ஒரு மகத்தான ஆசிரியராக லூக்கா முன்னிறுத்துகிறார். இயேசுவின் 23 உவமைகளை பதிவிடுகிறார். இவற்றில் 18 உவமைகள் வேறெங்கும் சொல்லப்படவில்லை.
- இயேசு தமது அப்போஸ்தலர்களை தெரிவுசெய்வதற்கு முன்பதாக இரவு முழுவதும் ஜெபித்ததை மற்ற சுவிஷேகர்களைவிட வித்தியாசமாக லூக்கா எழுதுகிறார் (6:12-16)
- லூக்காவில் சொல்லப்பட்டுள்ள சில அறிக்கைகள் இயேசுவின் பரிசுத்தத்தை மிக தெளிவாக காண்பிக்கின்றது. 23:27ல் “இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான” என்கிற நூற்றுக்கு அதிபதியின் அறிக்கை.
- இயேசுவின் நாட்களில் இஸ்ரவேல் ஒரு தட்டுவர்க்க சமூகமாக இருந்தது. பலவீனர்களும், கீழ்மட்டத்தில் இருந்தவர்களும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ளும் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். “தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது”(10:9) என்கிற செய்தியால் அதிகம் ஈர்க்கப்பட்டவர்கள் இவர்களே.

- யூத தலைவர்கள் சற்றும் கண்டுகொள்ளாத அன்பையும், மனிதநேயத்தையும் இயேசு வெளிப்படுத்தியதை லூக்கா வலியுறுத்திக் காண்பிக்கிறார்.

1. பெண்கள் (மரியாள்,எலிசபேத்து,அன்னாள்,மரியாளும்,மார்த்தாளும் போன்றவை)
2. ஏழைகள் (லூக்காவின் பாக்கிய வசனங்கள்,6:20-23, ஐசுவரியத்தை குறித்த உபதேசம் (12:13-21,16:9-13,19-31)
3. சமூகத்தால், இனத்தால், மதத்தால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள்

    (1) தவறான நடத்தையுள்ள பெண் (7:36-50)

    (2) சமாரியர்கள் (9:51-56,10:29-37,17:11-16)

    (3) குஷ்டரோகிகள் (17:11-19)

    (4) ஆயக்காரர்கள் (3:12-13,15:1-2,18:9-14,19:1-10)

    (5) கள்வர்கள் (23:35-43)

    (6) குடும்பத்தில் குழப்பம் விளைவிப்பவர்கள் (15:11-32)

    (7) தரித்திரர் (6:20,16:19-31)

    (8) புறஜாதிகள் (13:29,14:23)

# லூக்காவில் மாத்திரமே இடம்பெறும் தனிச்சிறப்புக்கள்

## லூக்காவில் உள்ள தனித்துவமான அற்புதங்கள்

1. நாயீன் விதவையின் மகன் உயிர்ப்பிக்கப்பட்டது 7:12-17
2. ஓய்வுநாளில் ஜெபாலயத்தில் சுகவீனமான பெண் சுகம்பெறுதல் 13:10-17
3. ஓய்வுநாளில் ஜெபாலயத்தில் சுகவீனமான மனிதன் சுகம்பெறுதல் 14:1-6
4. பத்து குஷ்டரோகிகள் குணமாகி அதில் சமாரியன் ஒருவன் மாத்திரம் நன்றி சொல்ல திரும்பிவருதல் 17:11-18

## லூக்காவில் உள்ள தனித்துவமான உவமைகள்

1. நல்ல சமாரியன் 10:25-37
2. தொந்தரவு செய்யும் நண்பன் 11:5-13
3. ஐசுவரியவானான முட்டாள் 12:13-21
4. தொலைந்துபோன பணம் 15:8-10
5. இரு மகன்கள் 15:11-32
6. அநீதியுள்ள உக்கிராணகாரன் 16:1-8
7. ஐசுவரியவானும், லூாசருவும் 16:19-31
8. அநீதியுள்ள நியாயதிபதி 18:1-8
9. பரிசேயனும், ஆயக்காரனும் 18:9-14

## லூக்காவில் உள்ள தனித்துவமான மற்றவை

1. முதல் இரண்டு அதிகாரங்களில் விபரிக்கப்படுபவை
2. ஆயக்காரனாகிய சகேயு 19:1-10
3. இயேசுவை விசாரணைக்காக பிலாத்து ஏரோதுவிடம் அனுப்புதல் 23:8-12
4. எம்மாவு செல்லும் பாதையில் இருவர் 24:13-32

# முக்கிய பகுதிகள்

முன்னுரை (1:1-4)

யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுவின் பிறப்பு(1:5—2:52)

- பரலோகத்தின் அறிவிப்புக்கள் (1:5–56)
- யோவான் ஸ்நானகனின் பிறப்பு (1:57–80)
- இயேசுவின் பிறப்பும் சிறுபிராயமும் (அதி 2)

இயேசு பொது ஊழியத்திற்கு தயாராதல் (3:1—4:13)

- அவருக்கு முன்னோடினவன் (3:1–20)
- அவரது ஞானஸ்நானம் (3:21–22)
- அவரது வம்சவரலாறு (3:23–38)
- அவரது சோதனை (4:1–13)

இயேசுவின் கலிலேயா ஊழியங்கள் (4:14—9:9)

- கலிலேயாவில் ஊழியத்தின் ஆரம்பம் (4:14–41)
- முதலாவது கலிலேயா பயணம் (4:42—5:39)
- ஓய்வுநாள் சர்ச்சை (6:1–11)
- 12 அப்போஸ்தலாகள் தெரிவு(6:12–16)
- சமவெளியில் பிரசங்கம் (6:17–49)
- கப்பர்நகூமிலும், நாயீனிலும் அற்புதங்கள் (7:1–18)
- யோவான் ஸ்நானகனின் விசாரணை (7:19–29)
- இயேசுவும் பரிசேயர்களும் (7:30–50)
- இரண்டாவது கலிலேயா பயணம் (8:1–3)
- ராஜ்யத்தின் உவமைகள் (8:4–21)
- கலிலேயா கடலில் பயணம் (8:22–39)
- மூன்றாவது கலிலேயா பயணம் (8:40- 9:9)

கலிலேயாவை சுற்றியுள்ள பகுதிகளுக்கு விலகிச் செல்லுதல் (9:10-50)

- கலிலேயா கடலின் கிழக்க கடற்கரை பகுதிக்கு (9:10–17)
- செசரியா பிலிப்பி பகுதிகளுக்கு (9:18–50)

யூதேயாவில் அவரது ஊழியங்கள் (9:51—13:21)

- சமாரியா வழியாக யூதேயாவுக்கு பயணம் (9:51–62)
- 72 பேரின் மிஷனரிப்பணி (10:1–24)
- நியாயசாஸ்திரியும் நல்ல சமாரியன் உவமையும் (10:25–37)
- பெத்தானியாவில் மார்த்தாள் மரியாள் வீட்டில் (10:38–42)
- யூதேயாவில் உபதேசம் (11:1—13:21)

# முக்கிய பகுதிகள்

பெரேயாவை சுற்றியுள்ள பகுதிளில் அவரது ஊழியங்கள் (13:22—19:27)

- இடுக்கமான வாசல் (13:22–30)
- ஏரோதைக் குறித்த எச்சரிக்கை (13:31–35)
- பரிசேயன் வீட்டில் (14:1–23)
- சீஷத்துவத்தின் விலை (14:24–35)
- காணாமல்போன ஆடு, பணம், மகன் உவமைகள் (உா. 15)
- விவேகமாய் நடந்துகொண்ட உக்கிராணக்காரன ் உவமை (16:1–18)
- ஐசுவரியவானும் லாசருவும் (16:19-31)
- பல்வேறு உபதேசங்கள் (17:1–10)
- குணமான பத்து குஷ்டரோகிகள் (17:11–19)
- வரவிருக்கும் ராஜ்யம் (17:20–37)
- தொந்தரவு செய்யும் விதவை (18:1–8)
- பரிசேயனும் ஆயக்காரனும் (18:9–14)
- இயேசுவும் சிறுபிள்ளைகளும் (18:15–17)
- ஐசுவரியமுள்ள வாலிபன் (18:18–30)
- இயேசு தமது மரணத்தை முன்னறிவித்தல் (18:31–34)
- பிச்சைக்கார குருடன் பார்வையடைதல் (18:35–43)
- இயேசுவும் சகேயுவும் (19:1–10)
- பத்து பத்துராத்தல் திரவிய உவமை (19:11–27)

அவரது இறுதி நாட்கள்: பலியாக ஒப்புக்கொடுத்தலும், வெற்றியும் (19:28—24:53)

- வெற்றிப் பிரவேசம் (19:28–44)
- ஆலய சுத்தீகரிப்பு (19:45–48)
- யூத தலவர்களுடனான இறுதிச் சர்ச்சை (அதி 20)
- ஒலிவமலை உரை (அதி 21)
- இறுதிப் பந்தி (22:1–38)
- இயேசு கெத்சேமேனேயில் ஜெபித்தல் (22:39–46)
- இயேசுவின் கைது (22:47–65)
- இயேசுவின் விசாரணை (22:66—23:25)
- சிலுவை மரணம் (23:26–56)
- உயிர்த்தெழுதல் (24:1–12)
- உயிாத்தெழுந்த பின் ஊழியம் (24:13–49)
- பரமேறிப்போதல் (24:50–53)